**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.25/17**
**வழக்கு சாட்சி – அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேல்முருகன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 17.04.23

**( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்துவருகிறேன். 13.6.16 அன்று எங்களது வீட்டிற்கு அருகில் வசிக்கும் செந்தில்கணேஷ் என்பவர் என்னிடமும், அய்யனாரிடமும் கணேஷ் என்பவரது வீட்டில் பூட்டு உடைக்கப்பட்டுள்ளது என்று கூறி எங்களை அழைத்தார். நாங்கள் சென்று பார்த்த போது கணேஷ் என்பவரது வீட்டின் வெளிகேட் உடைக்கப்பட்டிருந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்த போது கதவும் உடைக்கப்பட்டிருந்தது. பெட்ரூம் கதவும் உடைக்கப்பட்டிருந்தது. அன்றையதினம் கணேஷ் என்பவருக்கு தகவல் கொடுத்தோம். 14.6.16 அன்று கணேஷன் வீட்டிற்கு வந்து பார்வையிட்டு 5 பவுன் செயின் ஒன்றும், 1 பவுன் செயின் ஒன்றும், 2 மோதிரம், ஒரு ஜோடி கம்மல், ஒரு கேமரா வைத்திருந்ததாகவும், அது திருடுபோய்விட்டதாகவும் கூறினார். அதன்பின்னர் கணேஷன் பிசிப்பட்டி காவல்நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்துபுகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கணேஷன் வீட்டை யார் உடைத்து யார் திருடினார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். செந்தில்கணேசன் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதாக என்னிடம் கூறியபோது காலை 7 மணி இருக்கும். கணேசன் வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பது குறித்து நானோ என்னிடம் இருந்தவர்களோ போலிசாரிடம் தகவல் சொன்னோமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கணேசனுக்கு எப்போது பூட்டு உடைக்கப்பட்டிருப்பது குறித்து தகவல் கொடுத்தோம் என்றால் 2 மணி நேரம் கழித்து தகவல் கொடுத்தோம். பூட்டு உடைக்கப்பட்ட வீட்டின் முன்பு எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் அரைமணிநேரத்தில் எனக்கு சவாரி வந்தால் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். நான் அங்கு இருந்தவரை போலிசார் வந்தார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அன்றையதினம் நான் காவல்நிலையம் செல்லவில்லை அவர்கள் தான் சென்றார்கள். அந்த இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்னது போல் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதை நான் சென்று பார்க்கவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து வழககிற்கேற்ப பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதை நான் பார்த்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.